DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: S.TC. No.20/2026 |
| Session | ... | |
| | | Prosecution / PW–1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கோவிந்தசாமி |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.துரைசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1,A2 present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 02.06.2026

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது ஆர்எஸ் மங்கல காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆர்எஸ் மங்கல காவல் நிலையத்தின் புறகாவல் நிலையமானது ஆனந்தூரில் உ ள்ளது. சார்பு ஆய்வாளரின் உத்தரவின் பேரில் நானும், காவலர் முருகானந்தமும் ஆனந்தூர் புறகாவல்நிலையத்தில் பணியில் இருந்தோம். 22.10.2025 ம் தேதி நாங்கள் பணியில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் தீபாவளிக்காக தீயணைப்பு துறை, வருவாய் துறை, காவல் துறை ஆகியோரின் பெயரை சொல்லி

பணம் வசூலிப்பதாக தெரியவருவதாக அதை பற்றி விசாரிக்கும் படி சொன்னதின் பேரில் அன்றைய தினம் காலை 9.30 மணியளவில் ஆனந்தூர் பேருந்து நிலையத்திற்கு நானும் காவலர் முருகானந்தமும் சென்று விசாரித்தபோது ஆனந்தூரை சேர்ந்த விடிவெள்ளிநகர் அஜ்மல் (எ) அஜ்மல்கான், பரஞ்ஜோதி நகரை சேர்ந்த செல்வம் ஆகியோர் போலிஸ்,வருவாய் துறை, தீயணைப்பு துறை ஆகியோர் பணம் கேட்பதாக சொல்லி வசூல் செய்த விவரம் தெரியவந்தது.

2.நாங்கள் கூட்டானி உணவகத்தில் விசாரித்தபோது அங்கு அஜ்மல்கானும், செல்வமும் வந்து நாங்கள் தான் வசூல் செய்தோம், போலிஸ் யூனிபார்ம்போட்டால் நீங்கள் என்ன பெரிய சூன்னியடா, தேவிடியா பசங்களா என்று அசிங்கமாக வார்த்தைகளால் திட்டினார்கள். அவர்களை நாங்கள் பிடிக்க சென்றபோது எங்களை தட்டி விட்டு கொலைமிரட்டல் விடுத்து அரசு பணியை செய்யவிடாமல் தடுத்தார்கள். கூட்டானி உணவகத்தின் உரிமையாளர் சுலைமான் சேட்டு, ஹபீப் பெட்டிகடை முகமது ஆசிப் ஆகியோர் அங்கு வந்து அவர்களை சத்தம்போட்டவுடன் பிடிக்க சென்ற எங்களை தள்ளிவிட்டு அங்கிருந்துசென்றுவிட்டார்கள். பின்னர் சார்பு ஆய்வாளருககு தகவல்தெரிவித்து விட்டு நிலையம் ஆஜராகி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்ககோரி தனிஅறிக்கை கொடுத்தேன்.அந்த தனி அறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். தனி அறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் இருவரும் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். இது சம்மந்தமாக சார்பு ஆயவாளர்என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. என்னை சம்பவயிடத்திற்கு சென்று விசாரிக்க சொன்ன சார்பு ஆய்வளாரின் பெயர் முகமதுசைபுல் கிசாம் ஆகும். ஆர்எஸ் மங்கல காவல்நிலையத்தில் சம்பவசமயத்தில் ஒரு சார்பு ஆய்வாளர் தான் பணியாற்றி வந்தார். சார்பு ஆய்வாளர் எனக்கு போன் மூலம் சம்பவயிடத்திற்கு சென்று விசாரிக்க சொல்லி வாய்மொழி உத்தரவு பிறப்பித்தார். தனிபட்ட முறையில் எனக்கு பாதிப்பு ஏற்பட்டால் நான் காவல்நிலையத்தில் புகாராக தான் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. தனிஅறிக்கையாக தான் கொடுக்கவேண்டும். புகாருக்கு பதிலாக தனிஅறிக்கை கொடுக்க வேண்டும் என்று எந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

தனிஅறிக்கை என்பது வழக்குசம்மந்தமாக விசாரணை அதிகாரி நீதிமன்றத்தில சமர்பிக்கும் அறிக்கை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

2. தனிஅறிக்கையில் சார்பு ஆய்வாளர் எனக்கு வாய்மொழி உத்தரவை எங்கு வைத்து எவ்வாறு பிறப்பித்தார் என்று குறிப்பிட்டு தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. என்னை விசாரிக்க சொன்ன சார்பு ஆய்வாளரிடம் தான் நான் தனிஅறிக்கை கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவசமயத்தில் எங்கள் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளர், ஆய்வாளர், சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆகியோர் பணியில் இருந்தார்கள் என்றால் சரிதான். எதிரிகள் தீபாவளிக்கு காவல்துறை, வருவாய் துறை, தீயணைப்பு துறை பெயரை சொல்லி பணம் வசூலிப்பதாக எங்களுக்கு எழுத்து பூர்வ புகார் எதுவும் கிடைக்கபெறவில்லை என்றால அது பற்றி எனக்கு தெரியாது.

3.பொதுவாக வழக்கு சம்மந்தமாக விசாரிக்க தலைமை காவலருக்கு அதிகாரம் உள்ளதா என்றால் புறகாவல்நிலையத்தில் நான் மூத்த தலைமை காவலராக பணியாற்றி வந்ததால் எனக்கு அதிகாரம் உள்ளது. நாங்கள் கூட்டானி உணவகத்தின் சுலைமான்சேட்டு, ஹபீப் பெட்டிகடை முகமது ஆசிப் ஆகிய நபர்களிடம் விசாரித்துகொண்டிருந்தபோது எதிரிகள் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார்கள். மேற்படி இருநபர்களிடமிருந்தும் நான் புகார் ஏதேனும் பெற்று கொண்டேனா என்றால் நான் புகார் எதுவும் பெறவில்லை.  சம்பவத்திற்கு முன்போ அல்லது பின்போ மேற்கண்ட ,இருநபர்களும் எதிரிகள் மீது சார்பு ஆய்வாளரிடம் புகார் கொடுத்தார்களா என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது. சம்பவயிடமானது கடை தெரு என்பதால் அங்கு அதிகமான கடைகள் உள்ளது என்றால சரிதான்.

4. மேற்படி இரு  நபர்கள் தவிர வேறு கடையின் உரிமையாளர்கள் அல்லது வேலைசெய்பவர்களிடம் விசாரணை செய்தேனா என்றால் மேற்படி இருநபர்களிடம் விசாரித்து கொண்டிருந்தபோதே எதிரிகள் வந்து பிரச்சனை ஏற்பட்டதால் பிற நபர்களிடத்தில் விசாரிக்கவில்லை.வழக்கு சம்மந்தமாக எதிரிகளிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான். சம்பவஇடமான கடையிலும் அதை

சுற்றியுள் பகுதிகளிலும சிசிடிவி கேமரா உள்ளதா என்றால்( **சாட்சி உள்ளது என்று பதில்அளித்துவிட்டு பின்பு அது பற்றி தெரியாது என கூறினார்.**)

**5.** சம்பவயிடத்தில் சிசிடிவி கேமரா உள்ளது என்றும் அதை ஒப்புகொண்டால் வழக்கு பாதகமாகவிடும் என்பதால் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் புறகாவல்நிலையத்தில் ,இருந்துகொண்டு பொதுமக்களுக்கு தொந்தரவு கொடுத்தோம் என்றும் அதை எதிரிகள் கேட்டபோது அவர்கள் மீது பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் உள்ள சிசிடிவி கேமராக்களை ஆய்வுசெய்தால் எதிரிகள் குற்றசெயலில் ஈடுபட்டார்களா என்ற உண்மை தெரியவரும் என்றால் வழக்கினை விசாரித்த விசாரணைஅதிகாரிக்கு தான்அந்த விவரம் தெரியும்.

6. பொதுவாக காவலர்கள் சட்ட ஒழுங்கு சம்மந்தமாக பணியாற்றும் போது தனி நபர்கள் மீது அரசு பணியை செய்யவிடாமல் தடுத்ததாக எவ்வித புகாரும் கொடுக்க முடியாது என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்னநேரத்தில் எதிரிகள் எந்த வித குற்றசெயலிலும் ஈடுபடவில்லை என்றும் நாங்கள் சட்டவிரோதமாக செய்த செயல்களை எதிரிகள் கண்டித்ததால் அவர்கள் மீதுபொய்யாக தனிஅறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எதிரிகள் மீது தனிபட்ட முறையில்புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆஜர்எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.